# பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

## மானியக் கோரிக்கை எண்.18

## அறிவிப்புகள்
## 2022-2023

**தா. மோ. அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

# பட்டுவளர்ச்சித் துறை

## 1) ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பில் 5,000 ஏக்கரில் அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்

அதிக மகசூல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கிட, 2022-2023 ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு ஊக்கத்தொகையாக 10,500 ரூபாய் வீதம் **5,000 ஏக்கருக்கு** மொத்தம் **5 கோடியே 25 இலட்சம் ரூபாய்** நிதி உதவி வழங்கப்படும்.

**2) தரமான பட்டுக்கூடு உற்பத்தியினை ஊக்குவிக்க, 500 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 6 கோடி மதிப்பில் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க உதவித்தொகை வழங்கப்படும்**

பட்டுப்புழுவளர்ப்பிற்கு உகந்த தட்பவெப்ப சூழ்நிலைகளைப் பராமரித்து சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, தரமான பட்டுக்கூடுகள் அறுவடை செய்திடும் வகையில், கடந்த ஆண்டு 300 பட்டுப்புழு வளர்ப்பு மனைகளுக்கு 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டதை உயர்த்தி, 2022-2023 ஆம் ஆண்டில் 500 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்துப் பயன்பெறும் வகையில், பட்டுப்புழு வளர்ப்பு மனைக்கு 1,20,000/- ரூபாய் வீதம், **500 பட்டுப்புழு வளர்ப்பு மனைகளுக்கு** மொத்தம் **6 கோடி ரூபாய்** நிதி உதவி வழங்கப்படும்.

**3) ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பில் பட்டுக் கூடுகளின் தரத்தை அதிகரிக்க 1,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்கப்படும்**

பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்திட, 2022-2023 ஆம் ஆண்டில், 1,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் **5 கோடியே 25 இலட்சம்** ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

## 4) ரூபாய் ஒரு கோடியே 5 இலட்சம் மதிப்பில் 300 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்படும்

பட்டு விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையினை ஏற்று முன்னோடி பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கடந்த ஆண்டில் 200 பட்டு விவசாயிகளுக்கு 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்பட்டது.

2022-2023 ஆம் ஆண்டில், 300 முன்னோடி பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், பவர் டில்லருக்கு தலா 35,000/- ரூபாய் வீதம் 300 பவர் டில்லர்கள் ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

## 5) ரூபாய் 29 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் பட்டுவளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் எட்டு அரசு அலகுகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் அரசு அலகுகளான,

• தென்காசி மாவட்டம் நன்னகரம் அரசு பட்டு நூற்பு அலகு கட்டட மேற்கூரையினை புனரமைப்பு செய்தல், மற்றுமொரு அலகான அரசு பட்டுக்கூடு அங்காடியில் பட்டுக்கூடு சேமிப்புக் கட்டடம் அமைத்தல்,

• தருமபுரி மாவட்டம் சோகத்தூர் அரசு பட்டுப்பண்ணை இளம்புழு வளர்ப்பு மைய கட்டடம் புனரமைப்பு செய்தல்,

• திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை அரசு பட்டுக்கூடு அங்காடி கட்டடம் புனரமைப்பு செய்தல்,

• கிருஷ்ணகிரி மாவட்டம் கல்கொண்டப்பள்ளி அரசு விதைப் பண்ணையின் புழுவளர்ப்பு மைய கட்டடம் புனரமைப்பு செய்தல் மற்றும் நீர்த்தேக்க வசதி ஏற்படுத்துதல்,

• கிருஷ்ணகிரி மாவட்டம் தளி அரசு விதைப்பண்ணையில் புழுவளர்ப்பு மைய கட்டடம் புனரமைப்பு செய்தல் மற்றும் இளம்புழு வளர்ப்பு மைய கட்டடத்தில் மின் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்,

• கிருஷ்ணகிரி மாவட்டம் உளிமங்கலம் அரசு விதைப்பண்ணை கட்டடம் புனரமைப்பு செய்தல்,

• கன்னியாகுமரி மாவட்டம் கோணம் மாதிரி செயல்விளக்க பயிற்சி மையத்தில் பட்டுக்கூடு கைவினைப் பொருள் மையம் அமைத்தல்

ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் எட்டு அரசு அலகுகளில் மேம்படுத்திட, **29 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்** நிதியுதவி வழங்கப்படும்.

## 6) ரூபாய் 24 இலட்சத்து 45 ஆயிரம் மதிப்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்படும்

2022- 2023 ஆம் ஆண்டில் வெண்பட்டுக்கூடு உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் 37 மாவட்டங்களில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ. 25,000/-, ரூ. 20,000/- மற்றும் ரூ. 15,000/- ரொக்கப்பரிசும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே, ரூ,1,00,000/-, ரூ .75,000/-, மற்றும் ரூ .50,000/- ரொக்கப்பரிசும் வழங்கிட 24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

## 7) ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்

2022 - 2023 ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிகளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு மாநில அளவில் முறையே 1,00,000/- ரூபாய், 75,000/- ரூபாய் மற்றும் 50,000/- ரூபாய் என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

**8) ரூபாய் 97 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பில் 10 பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவப்படும். இதற்கென மாநில அரசு நிதி உதவியாக ரூபாய் 24 இலட்சத்து 36 ஆயிரம் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டின் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கென அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளில், பட்டுப்புழுவளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில், தேவைப்படும் மாவட்டங்களில் பட்டுக்கூடு விற்பனை மையம் அமைக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூட்டிற்கு உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்ற வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில் 24.09.2021 அன்று நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் முத்துக்காளிப்பட்டியில் புதிய அரசு பட்டுக்கூடு அங்காடி அமைக்கப்பட்டு, 31.03.2022 வரை 2 கோடியே 9 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று, பட்டுநூல் முறுக்காலை அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும் என்ற வாக்குறுதியினையும் நிறைவேற்றும் நோக்கில், 2022-2023 ஆம் ஆண்டில் பட்டுநூற்பாளர்களால் தரமான முறுக்கேற்றிய பட்டு நூல் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க ரூபாய் 97 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பில் 10 பட்டு முறுக்கேற்றும் அலகுகள் தனியார் தொழில் முனைவோர்களால் நிறுவப்படும். இதற்கென மாநில அரசு நிதி உதவியாக 24 **இலட்சத்து** 36 **ஆயிரம்** ரூபாய் வழங்கப்படும்.

# தமிழ்நாடு கைத்திறத்
# தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## 1) ரூபாய் ஒரு கோடி மதிப்பில் மரச்சிற்ப வேலைப்பாடு செய்யும் கைவினைக் கலைஞர்களின் நலனுக்காக சேலம் மாவட்டம் தம்மம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் மரச்சிற்ப கைவினைக் கிராமம் (Wood Craft Village) அமைக்கப்படும்

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, கங்கவள்ளி, உலிபுரம், நாகியம்பட்டி, கொண்டயம்பள்ளி மற்றும் அதை ஒட்டிய கிராமங்களை உள்ளடக்கிய கைவினைக் குழுவில் சுமார் 300 கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்விடத்தில் "மரச்சிற்ப கைவினைக் கிராமம்" நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், கைவினைஞர்களுக்கான வேலைக் கொட்டகைகள், மேம்படுத்தப்பட்ட கருவிகள், பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவையும், உள்ளூர் கைவினைஞர்களின் நலனுக்காக கைவினைக் கிராமத்தில் சாலைகள், தெரு விளக்குகள், நடைபாதைகள், கைவினைஞர்களுக்கான உற்பத்திக்கூடம், விற்பனை காட்சியகம் மற்றும் வாங்குவோர் – விற்போர் சந்தை ஆகிய பணிகள் **ரூபாய் ஒரு கோடி** மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

**2) ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் உருவாக்கப்பட்ட பொது வசதி மையங்களை முழுமையான அளவில் பயன்படுத்தவும், மாநில கலைவடிவமைப்பு மையம் ஒன்றை அமைத்து கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்து முறையான திட்டம் வகுக்க ஆலோசகர்கள் நியமனம் செய்யப்படும்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைவினைஞர்களின் திறன் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முழுவதும் 13 பொது வசதி மையங்களை நிறுவியுள்ளது. இப்பொது வசதி மையங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி, கைவினைப் பொருட்களை விரைவாகவும், தரமாகவும், உற்பத்தி செய்திட இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் கைவினைஞர்களுக்கு பயிற்சிகள் அளிக்கவும் தொழில்நுட்ப ஆலோசகர்கள் நியமித்து ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3) ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பில் மாநிலம் முழுவதும் உள்ள கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் கைவினைப் பொருட்களை புகைப்படம் எடுத்து மின் இணையதளத்தில் ஆவணப்படுத்தி சந்தைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும்**

தமிழக கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை உலகளவில் அறியச்செய்ய பிரபல மின்வணிக நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். கைவினைக் குழுமங்கள் மற்றும் கைவினைஞர்களை அணுகி, அவர்களின் தயாரிப்புகளை புகைப்படம் எடுத்து ஆவணப்படுத்தி அவற்றை பூம்புகாரின் மின்வணிக இணையதளத்தில் பதிவு செய்து விற்பனையை அதிகரிக்க ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

## 4) தமிழ்நாட்டின் புகழ் பெற்ற சுற்றுலாத்தலங்கள், கோயில்கள், வரலாற்று சின்னங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கைவினைப் பொருட்கள் மூலம் நினைவு பரிசுகளாக உற்பத்தி செய்து சுற்றுலா பயணிகளுக்காக சந்தைப்படுத்தப்படும்

தமிழ்நாட்டின் புகழ் பெற்ற தொன்மை வாய்ந்த சுற்றுலாத்தலங்கள், கோயில்கள், வரலாற்று சின்னங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கைவினைப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்து, பிரபலப்படுத்தி, இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவுப் பொருட்களாகவும் பரிசுப் பொருட்களாகவும் சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 5) ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு பரந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்த வாங்குவோர் – விற்போர் சந்திப்பு பெருநகரங்களில் ஏற்பாடு செய்யப்படும்

தமிழ்நாடு கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு பரந்த சந்தை வாய்ப்பை வழங்குவதற்கு மும்பை, புதுதில்லி, அகமதாபாத், பெங்களூரு மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் வாங்குவோர்-விற்போர் சந்திப்பு நடத்தப்படும். இதில் சாலைக்காட்சி மற்றும் கலந்துரையாடல் நடத்தப்படும். மேலும் கைவினைப் பொருட்கள் மொத்த கொள்முதலாளர்கள், கட்டடக் கலைஞர்கள் இக்கண்காட்சியில் பங்கேற்க அழைக்கப்படுவார்கள். இந்த கலைத்தொழில் பரிவர்த்தனை மற்றும் சந்தை வளர்ச்சி கண்காட்சிகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**6) ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தவும், கைவினைப் பொருட்களின் முன்மாதிரியை விரைவாக வடிவமைக்கவும் கைவினைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய இடங்களில் நடத்தப்படும்**

கைவினைப் பொருட்களின் உற்பத்தி செயல்முறைகளை தரப்படுத்தவும், புதிய மற்றும் பிரபலமான வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தவும், கைவினைப் பொருட்களின் முன்மாதிரியை விரைவாகவும், திறமையாகவும் வடிவமைத்திட, கைவினைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்க, திறன் மேம்பாட்டுப் பயிற்சிப்பட்டறைகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் **ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம்** மதிப்பில் நடத்தப்படும்.

## 7) ரூபாய் ஒரு கோடி மதிப்பில் இந்தியா முழுவதும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் நிகழ்வுகளில் கைவினைஞர்கள் பங்கேற்க செலவினங்கள் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாடு கைவினைஞர்களின் தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்காக EPCH, ITPO, CII போன்றவற்றால் நடத்தப்படும் கண்காட்சிகளில், கைவினைஞர்கள் பங்கேற்க விற்பனைக்கூடக் கட்டணம், போக்குவரத்து செலவு, ஏற்றுகூலி மற்றும் இறக்குகூலி வழங்க ரூபாய் ஒரு கோடி மதிப்பில் ஏற்பாடு செய்யப்படும்.

## 8) ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மதிப்பில் தமிழ்நாடு கைவினைஞர்கள் சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் அதன்மூலம் கிடைக்கும் பயன்கள் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்படும்

தமிழ்நாடு கைவினைக் கலைஞர்கள் அவர்களின் நலனுக்காக தமிழ்நாடு கைவினைஞர்கள் நலவாரியம் மற்றும் ஒன்றிய அரசின் சமூக பாதுகாப்பு நலத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பலன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த அந்தந்த மாவட்டங்களில் உள்ள கைவினை குழுமங்களில் விழிப்புணர்வு முகாம்களை நடத்தவும், தமிழ்நாடு முழுவதும் உள்ள கைவினைஞர் குழுமங்களின் டிஜிட்டல் வரைபடத்தை உருவாக்கி மற்ற விவரங்களை சேகரித்து பாதுகாக்க ரூபாய் 75 இலட்சம் மதிப்பில் தயார் செய்து ஆவணப்படுத்தப்படும்.

**தா. மோ.அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.